**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **OS 31 of 2022** |
| Deposition of witness | : | **PW-1** |
| Name | : | சென்னியப்பன் |
| Father Name | : | கருப்பன் |
| Age | : | **65** |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24.01.2025.*

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

1. நான் ஒன்பதாம் வகுப்பு படித்துள்ளேன். எனது தந்தை கருப்பனுக்கு மொத்தம் ஐந்து மகன்கள், நான்கு மகள்கள். எனது தந்தை இந்த வழக்கு தாக்கல் செய்து இரண்டு வருடம் கழித்து இறந்து விட்டார். நான் என்னுடன் பிறந்த வேறு யாரையும் இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தந்தை இறந்த பின்னிட்டும் கூட நான் அவர்களை இந்த வழக்கில் அவரது வாரிசாக சேர்க்க எந்த ஒரு மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தை தாவா சொத்து சம்பந்தமாக என் மீதும் மற்ற வாரிசுகள் மீதும் திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்து இருந்தார் என்றால் சரிதான்.

2. வருவாய் கோட்டாட்சியர் அவரது விசாரணையில் எனது தந்தை எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்து சொத்தை மீண்டும் எனது தந்தைக்கு ஒப்படைத்தார் என்றால் சரிதான். நான் அதை எதிர்த்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மேல்முறையீடு செய்தேன்

என்றால் இல்லை, எனது தம்பி தான் மேல்முறையீடு சென்றார். அந்த மேல்முறையீட்டிலும் எங்களது மனு தள்ளுபடி செய்ததாக பின்னால் தெரிந்து கொண்டேன்.

3. நான் மேற்படி விவரங்களை அந்தந்த சம்பவங்கள் போதே தெரிந்திருந்தும் வேண்டுமென்றே தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி விவரங்களை எனது பிராதில் கூறியுள்ளேன் என்றால் இல்லை. நான் மேற்படி விவரங்களை பிராதில் சொல்லாமல் விட்டதற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதி எதிர்வாதம் தாக்கல் செய்த பின்னிட்டாவது நான் அது சம்பந்தமாக ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் எனது சகோதர சகோதரிகளுடன் தற்போதும் சமூகமான உறவில் தான் உள்ளேன் என்றால் சரிதான்.

4. நான் எனது தந்தையை எந்த மருத்துவமனையில் எத்தனை நாட்கள் வைத்து பார்த்தேன் என்று காட்டுவதற்கு எந்த ஒரு ஆவணத்தையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

(பிரதிவாதியின் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது ).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B
DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.01.24 17:57:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,

ஊத்துக்குளி.